[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2022 ஜனவரி 6*

இந்த ஆளுநர் உரையில் எந்தவிதமான மக்கள் நலத் திட்டங்களும் இல்லை. இந்த அரசு, ஆளுநர் உரை மூலமாக தங்கள் முதுகை தாங்களே தட்டிக்கொண்டுள்ளனர். ஆளுநர் உரைமூலம் நலத் திட்டங்கள் பலவற்றை இந்த அரசு அறிவிக்கும் என்று காத்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இந்த ஆட்சியாளர்கள் அளித்த வாக்குறுதிகள் கானல் நீராக மாறியுள்ளன. ஆளுநர் உரை என்ற பெயரால் வாக்களித்த மக்களின் தலையில் வாசமில்லாத காகிதப் பூவை இந்த அரசு சூட்டியுள்ளது என்ற செய்தியைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (7–1–2022) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 3–53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 13–4–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232(h–7) 2020 ஆம் எண் அறிவிக்கையினை இரத்து செய்துவிட்டு, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 25 ஆம் பிரிவைச் சேர்ந்த (6B) ஆம் உட்பிரிவு அல்லது (6C) ஆம் உட்பிரிவின் விதிமுறைகள் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருந்தாத நபர்கள் குறித்து 25–2–2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1) த் துறையின் அரசாணை (நிலை) எண் 47–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

2. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (பன்னிரெண்டாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 19–10–2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 159–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

2022 ஜனவரி 6]

3. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மூன்றாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B*1*) துறையின் *11–5–2021* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *77*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2017* ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *19/2017*) *166* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

4. 3–6–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–*2*–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(*2*)/வவப/*385*(f)/*2019* ஆம் எண் அறிவிக்கைக்கு பதிலாக, தமிழ்நாடு முன் தீர்வுக்கான அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து *28–7–2021* ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B*1*) துறையின் அரசாணை (நிலை) எண் *103*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2017* ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *19/2017*) *166* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. யாதொரு வணிகர், சேர்மங்களுடனோ அல்லது இல்லாமலோ உள்ள பெட்ரோல் விற்பனை மீதான செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B*2*) துறையின் *13–8–2021* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *105*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *80*(*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு யாதொரு பதிவுபெற்ற நபரும் *13–4–2020* ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அறிவிக்கை எண் II(*2*)/வவப/*232*(h–*6*) /*2020*–ல் வெளியிடப்பட்டுள்ள விதித்துறைகளுக்கு இணக்கமாக இல்லாததன் காரணமாக *1–12–2020* ஆம் நாள் முதல் *30–9–2021* வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு செலுத்த வேண்டிய தண்டத்தொகையை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B*1*) துறையின் *2–7–2021* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *99*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2017* ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும்

சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2021 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2021) (ஆங்கிலம்)

2. 2021 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2021) (ஆங்கிலம்)

3. 2021 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2021) (ஆங்கிலம்)

4. 2021 ஆம் ஆண்டு கரூர் மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2021) (ஆங்கிலம்)

5. 2021 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2021) (ஆங்கிலம்)

6. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்)இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2021) (ஆங்கிலம்)

7. 2021 ஆம் ஆண்டு கும்பகோணம் மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2021) (ஆங்கிலம்)

8. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2021) (ஆங்கிலம்)

9. 2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2022) (ஆங்கிலம்)

10. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

11. 2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்)